Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349


# ஹலோ மிரர் மெட்ராஸ்

hellomadrasdaily@gmail.com RNI No.TNBIL/2021/81709 தினசரி காலை நாளிதழ்

உள்ளது உள்ளபடி


KARUNAII TRUST
அன்னை சிறப்பு பள்ளி
Contact :
98413 59935

மலர் 3 | சென்னை | தினசரி | 4 பக்கம் | புதன்கிழமை, நவம்பர் 08 | இதழ் 117

## தீபாவளி பண்டிகை: சென்னையில் இருந்து நாளை முதல் சிறப்பு பஸ்கள் இயக்கம்



சென்னை, 08 நவம்பர் 2023: தீபாவளி பண்டிகையையொட்டி சென்னையில் இருந்து நாளை முதல் சிறப்பு பஸ்கள் இயக்கப்படுகிறது. சிறப்பு பஸ்களில் பயணம் செய்ய இதுவரை 1 லட்சம் பேருக்கு மேல் முன்பதிவு செய்துள்ளனர்.

தீபாவளி பண்டிகைக்கு இன்னும் 4 நாட்களே உள்ள நிலையில் வெளியூரில் வசிப்பவர்கள் தீபாவளியை, சொந்த ஊரில் குடும்பத்துடன்

கொண்டாடுவதற்கு ஏதுவாக தமிழக அரசு சிறப்பு பஸ்களை அறிவித்தது.

கூட்ட நெரிசல் இல்லாமல் முன்பதிவு செய்து பயணிக்க ஏற்பாடு செய்து உள்ளது.

நாளை (9ந்தேதி) முதல் 11ந் தேதி வரை 3 நாட்கள் சிறப்பு பஸ்கள் விடப்பட்டுள்ளன.

வழக்கமாக தினமும் இயக்கப்படும் 2,100 பஸ்களுடன் கூடுதலாக 1,365 பஸ்கள் வீதம் இயக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. மொத்தம் 4,675 சிறப்பு பஸ்கள் இயக்குவதற்கு தயாராக உள்ளன.

சிறப்பு பஸ்களில் முன்பதிவு செய்து பயணம் செய்ய இதுவரையில் 1 லட்சம் பேருக்கு மேல் முன்பதிவு செய்திருப்பதாக தகவல்கள் வெளியாகி உள்ளது. சென்னையில் இருந்து மட்டும் செல்ல 80 ஆயிரம் பேர் முன்பதிவு செய்துள்ளனர்.

இந்த நிலையில் 13-ந்தேதியும் அரசு விடுமுறை விடப்பட்டுள்ளதால் வெளியூர் செல்வோர் எண்ணிக்கை மேலும் அதிகரித்து உள்ளது.

சென்னை கோயம்பேட்டில் நெரிசல் ஏற்படாமல் இருப்பதற்காக மேலும் 5 பஸ் நிலையங்களில் இருந்து சிறப்பு பஸ்கள் இயக்க திட்டமிடப்பட்டு உள்ளது.

சிறப்பு பஸ்கள் மாதவரம் புதிய பஸ் நிலையம், கே.கே. நகர் மாநகர பஸ் நிலையம், தாம்பரம் அண்ணா பஸ் நிலைய நிறுத்தம், பூந்தமல்லி விரைவுச்சாலை பஸ் நிறுத்தம் மற்றும் கோயம்பேடு பஸ் நிலையங்களில் நாளை இயக்கப்படுகின்றன. முன்பதிவு செய்த பயணிகள் அந்தந்த பஸ் நிலையங்களுக்கு செல்லுமாறு அறிவுறுத்தப்படுகிறது.

மேலும் முக்கிய பஸ் நிலையங்களில் இருந்து கோயம்பேட்டிற்கு இணைப்பு பஸ் வசதியும் ஏற்பாடு செய்யப்பட்டு உள்ளது. இதுவரையில் 1500க்கும் மேற்பட்ட அரசு பஸ்களுக்கான முன்பதிவு நடந்து உள்ளது. முன்பதிவு செய்யாமல் கடைசி நேரத்தில் பயணம் செய்ய வருவோர்கள் நேராக பஸ்களில் பயணிக்கலாம். இந்த ஆண்டு வெளியூர் செல்வோர் எண்ணிக்கை அதிகரித்து உள்ளது. அரசு பஸ்கள் தவிர ஆம்னி பஸ்களிலும் ஆயிரக்கணக்கானவர்கள் பயணத்தை தொடருகிறார்கள்.

## தீபாவளி தொடர் விடுமுறை: மெட்ரோ ரெயில் சேவை நேரம் நீட்டிப்பு




சென்னை, 08 நவம்பர் 2023: தீபாவளி பண்டிகையை முன்னிட்டு சென்னை மெட்ரோ ரெயில் சேவை நேரம் நீட்டிக்கப்படுகிறது.

சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம் வெளியிட்டுள்ள செய்தியில் கூறப்பட்டுள்ளதாவது:-

தீபாவளி தொடர் விடுமுறையை முன்னிட்டு சொந்த ஊருக்கு செல்லும் மெட்ரோ ரெயில் பயணிகளின் வசதிக்காக மாலை நெரிசல்மிகு நேரத்தில் இயக்கப்பட்டு வரும் மெட்ரோ ரெயில் சேவை, நாளை 9-ந் தேதி, 10-ந் தேதி மற்றும் 11-ந் தேதி ஆகிய நாட்களில் இரவு 10 மணி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

நீட்டிக்கப்பட்ட நெரிசல் மிகு நேரங்களில், இரவு 8 மணி முதல் 10 மணி வரை மெட்ரோ ரெயில் சேவைகள் இரண்டு வழித்தடங்களிலும் 9 நிமிட இடைவெளிக்கு பதிலாக 6 நிமிட இடைவெளியில் இயக்கப்படும்.

போக்குவரத்து நெரிசல் மற்றும் சிரமம் இல்லாத பயணத்தை மேற்கொள்ள பயணிகள் மெட்ரோ ரெயில் சேவையை பயன்படுத்திக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இந்த மெட்ரோ ரெயில் நீட்டிப்பு சேவை 9, 10, 11 ஆகிய மூன்று நாட்களுக்கு மட்டுமே.

இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.




Cements
Bulker / Bags
ALL Major Brands available
We Shall supply Cements with most competitive pricing
Rtn Dr R Sathyanarayanan
Senior Consultant
SRMPR Cements
Call or Whatsapp @ 8148231942

இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
11,SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349
பொது இ-சேவை மையம்
ALL ONLINE SERVICES

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி

புதன்கிழமை,
நவம்பர் 08, 2023

## ’டைகர் 3’யின் புதிய புரோமோவில் இந்தியாவை காக்கும் ஒன்மேன் ஆர்மியாக சல்மான் கான்




சென்னை, 08 நவம்பர் 2023: ‘டைகர் 3’யின் டீசர், டிரைலர் மற்றும் லேகே பிரபு கா நாம் பாடல் ஆகியவற்றின் வியத்தகு வெற்றியை தொடர்ந்து டைகர் மீண்டும் திரும்புகிறார் என்பதை அறிவிக்கும் விதமாக 50 வினாடி வீடியோ ஒன்றை யஷ்ராஜ் பிலிம்ஸ் இன்று வெளியிட்டு பார்வையாளர்களை ஆச்சர்யப்படுத்தி உள்ளது. எந்த விலை கொடுத்தேனும் இந்தியாவை அழிக்க நினைக்கும் எதிரிகளுக்கு எதிராக நின்று இந்தியாவை காக்கும் ஒரு ஒன்மேன் ஆர்மியாக சல்மான் கானை அதாவது டைகரை அறிமுகப்படுத்துகிறது.

உலகெங்கிலும் உள்ள பார்வையாளர்களுக்கு பிளாக் பஸ்டர் படங்களை மட்டுமே வழங்கிவருகின்ற யஷ்ராஜ் பிலிம்ஸின் ஸ்பை யுனிவர்ஸின் ‘டைகர் 3’ கட்டாயம் பார்க்கப்பட வேண்டிய கண்கவர் படம். ஏக் தா டைகர், டைகர் ஜிந்தா ஹை, வார் மற்றும் பதான் படங்களை தொடர்ந்து யஷ்ராஜ் பிலிம்ஸின் ஸ்பை யுனிவர்ஸ் வெற்றிப்படங்களின் வரிசையில் அவற்றின் நிகழ்வுகளுடன் தொடர்பு கொண்ட 5வது படமாக ‘டைகர் 3’ உருவாகியுள்ளது.

இந்த ஆக்சன் புரோமோவில் தீமையின் மொத்த மூளையாக செயல்படுபவனும் படத்தில் சூப்பர் ஏஜென்ட்டான டைகரின் விரோதியுமான இம்ரான் ஹாஸ்மியால் சல்மான் கான் மிரட்டப்படுகிறார். இந்தியாவை இரக்கமற்ற முறையில் துன்புறுத்துவேன் என்றும் இந்தியர்களை வேட்டையாடி வீழ்த்துவேன் என்றும் வெறித்தனமாக அறிவிக்கிறார் இம்ரான் ஹாஸ்மி’.

## “ரிலீஸ் தேதி வரை கதையின் முக்கிய திருப்பத்தை பாதுகாக்கும் விதமாக ‘டைகர் 3’யின் 2வது பாடலான “உயிர் உலா உலா”வை நிறுத்தி வைக்கும் யஷ்ராஜ் பிலிம்ஸ்



சென்னை, 08 நவம்பர் 2023: ரசிகர்கள் மத்தியில் மிகுந்த எதிர்பார்ப்பை ஏற்படுத்தும் என்பதற்காகவே யஷ்ராஜ் பிலிம்ஸ் எப்போதுமே தங்களது ஸ்பை யுனிவர்ஸ் வரிசை படங்களின் ரகசியங்களை காப்பதில் உறுதியாக இருந்து வருகிறது. வரும் நவ-12 ஞாயிறன்று தீபாவளி பண்டிகையில் ‘டைகர் 3’ வெளியாகும் வரை அதன் கதையின் முக்கிய திருப்பம் வெளியாகாமல் தடுப்பதற்காக 2வது பாடலான ‘உயிர் உலா உலா’வை நிறுத்தி வைக்க தீர்மானித்திருக்கிறார் ஆதித்யா சோப்ரா.

இது குறித்து இயக்குநர் மனீஷ் சர்மா கூறும்போது, “இந்தப்படத்தில் டைகரும் சோயாவும் மிகமிக பெர்சலான மற்றும் தீவிரமான பயணத்தை மேற்கொள்கிறார்கள். அதைத்தான் ‘உயிர் உலா உலா’ பாடல் விவரிக்கிறது. இந்தப்படத்தில் அது படமாக்கப்பட்டுள்ள விதம், சினிமாவாக பார்க்கும் அந்த தருணத்தின்போது புதிய அனுபவமாக இருக்கவேண்டும் என்பதற்காக நாங்கள் உண்மையிலேயே முக்கியமான கதைக்கருக்களை பிடித்து வைத்திருக்க விரும்பினோம்” என்கிறார்

மேலும் மனீஷ் கூறும்போது, “சல்மான் கானை வைத்து படமாக்கப்பட்ட படத்தின் ஆன்மாவான பாடல் இது என்பது தெரிந்தாலும் இந்த பாடலை நிறுத்திவைக்கும் முடிவை எடுத்திருக்கிறோம்.. இது உண்மையிலே கடினமாகத்தான் இருக்கிறது” என்கிறார் மேலும் அவர் கூறுகையில், “ஆனால் இறுதியில் ‘உயிர் உலா உலா’ பாடலை கதையின் சூழலுடன் நீங்கள் கேட்கும்போது நாங்கள் சரியான விஷயத்தை தான் செய்தோம் என்பது உங்களுக்கு தெரியவரும் என்பதையும் நாங்கள் அறிவோம். இது ஒரு மிக மிகப்பெரிய தருணம் என்பதுடன் அது ‘டைகர் 3’ படம் வெளியாகும் நாளில் இன்னும் உற்சாகத்தை கொடுக்கும் என்பதையும் நாங்கள் உணர்கிறோம்” என்கிறார்.

சல்மான் கான், கத்ரீனா கைப் இருவருமே தங்களது பெருமைமிகு கதாபாத்திரங்களான டைகர் மற்றும் சோயா என்கிற சூப்பர் உளவாளிகளாக இந்த ‘டைகர் 3’ என்கிற மூன்றாம் பாகத்திற்கு மீண்டும் திரும்பியுள்ளனர். யஷ்ராஜ் பிலிம்ஸின் ஸ்பை யுனிவர்ஸ் படங்களின் சினிமா காலவரிசையில் இது 5வது படமாகும். ஏக் தா டைகர், டைகர் ஜிந்தா ஹை, வார் மற்றும் பதான் என இதற்கு முந்தைய நான்கு படங்களும் பிளாக் பஸ்டர் வெற்றிப்படங்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## காசா நகரின் சுரங்கங்கள் மீது இஸ்ரேல் ராணுவம் தீவிர தாக்குதல்



சென்னை, 08 நவம்பர் 2023: காசா நகரின் மைய பகுதிக்கு சென்ற இஸ்ரேல் ராணுவம் சுரங்கங்கள் மீதான தாக்குதலை தீவிரப்படுத்தியுள்ளது.

இஸ்ரேல் - ஹமாஸ்களுக்கு இடையேயான போர் 33 வது நாளை எட்டியுள்ள நிலையில், இஸ்ரேல் படைகள் காசா நகரின் மையப்பகுதிக்குள் நுழைத்திருப்பதாக அந்நாட்டு ராணுவம் தெரிவித்துள்ளது. மேலும் ஹமாஸ்களை சுற்றி வளைத்துள்ள இஸ்ரேல் ராணுவம் ஹமாஸ்களின் பரந்த சுரங்கப்பாதைகளைக் கண்டுபிடித்து தாக்கத் தொடங்கியுள்ளதாகவும் கூறியுள்ளது.

இஸ்ரேலின் தரைப்படைகள் ஹமாஸ்கள் ஏற்படுத்தி வைத்திருக்கும் நீண்ட சுரங்கப்பாதை வலையமைப்பை தற்போது தாக்கத் தொங்கியுள்ளது. சுமார் 100 கிலோ மீட்டர் வரை நீண்டு செல்லும் சுரங்கப்பாதைகளை தகர்ப்பதற்காக இஸ்ரேஸ் ராணுவ பொறியாளர்கள் வெடிமருந்துக்களை பயன்படுத்தி வருவதாகவும் உயர் ராணுவ செய்தித்தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

இதனிடையே தொலைக்காட்சியில் பேசிய இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு, “ஒரு மாதத்தைக் கடந்துள்ள ஹமாஸ்களுக்கு எதிரான போர், அவர்கள் இதுவரை பார்த்திராதது. இஸ்ரேல் ராணுவம் மாபெரும் சக்தியுடன் முன்னேறி வருகின்றது. இஸ்ரேலின் தரைப்படைகள் ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு மணி நேரமும் ஹமாஸ்களுக்கு எதிரான பிடியைத் தீவிரப்படுத்தி வருகின்றன. மேலும் ஹமாஸ்கள் பிணைக் கைதிகள் அனைவரையும் விடுதலை செய்யும் வரை காசாவுக்கு எரிபொருள் வழங்கப்பட மாட்டாது என்று பிரதமர் தெரிவித்தார்.

இஸ்ரேலிய பாதுகாப்புத்துறை அமைச்சர், யோவ் கலண்ட், ஹமாஸ்களை அழிப்பதில் இஸ்ரேல் ராணுவம் உறுதியாக உள்ளது; இஸ்ரேல் படைகள் காசாவின் மையப்பகுதிக்குள் நுழைந்து விட்டன என்று தெரிவித்தார்.

இந்த நிலையில், உயிர்காக்கும் மருந்துப்பொருள்களைச் எடுத்துச்சென்ற செஞ்சிலுவைச் சங்கத்தின் வாகனங்கள் நேற்று காசா பகுதியில் தாக்குதலுக்கு உள்ளாகின. 5 லாரிகள், 2 பிற வாகனங்கள் மருந்துக்களை ஏற்றிச் சென்றுள்ளன. இதில் 2 வாகனங்கள் சேதமானதாகவும், ஒட்டுநர் ஒருவர் காயமடைந்துள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து மருந்துகள் ஏற்றிச் சென்ற வாகனங்கள் தங்களின் பாதையை மாற்றிக்கொண்டு, அல் ஷிஃபா மருத்துவமனையில் மருந்துப்பொருள்கள் கொடுக்கப்பட்டதாக செஞ்சிலுவைச் சங்கம் தெரிவித்துள்ளது.

இஸ்ரேலில் உள்ள காசா பகுதியில் அக்டோபடர் 7ஶ்ரீந்தேதி ஹமாஸ் பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில் 1,400 பேர் உயிரிழந்ததைத் தொடர்ந்து, ஹமாஸ்களை முற்றிலுமாக அழிக்கும் நோக்கில் இஸ்ரேல் ராணுவம் வான் வழியாக பதில் தாக்குதல் நடத்தியது. காசா நகரின் மீது இஸ்ரேல் நடத்தி வரும் இந்த பதில் தாக்குதலில் இதுவரை 10,000-க்கும் அதிகமானோர் கொல்லப்பட்டுள்ளனர்.

இஸ்ரேலில் 1,400 பேர் பலியாகியுள்ளனர். 242 பேர் ஹமாஸ் படையினரால் பிணைக் கைதிகளாகப் பிடித்துச் செல்லப்பட்டனர். ஆனால் இன்னும் போருக்கு சுமூக தீர்வு எட்டப்படவில்லை. உலக தலைவர்கள் போர் நிறுத்தத்துக்கு அழைப்பு விடுத்து வருகின்றனர். ஆனால் இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு இதனை மறுத்து வருகிறார்.

அமெரிக்கா, ஹமாசுக்கு எதிரான போரில் இஸ்ரேலுக்கு முழு ஆதரவு அளித்துள்ளது. அதே சமயம் அமெரிக்க அதிபர் ஜோ பைடன், “ஹமாஸை அழிப்பது அவசியம். ஆனால் அதற்காக ஹமாஸ் பிடியில் உள்ள காசாவை முழுவீச்சில் இஸ்ரேல் ஆக்கிரமிக்க நினைப்பது தவறு. மனிதாபிமான போர் நிறுத்தம் தேவை” என்று கூறி வருகிறார். இந்தியா உள்ளிட்ட நாடுகள் பாலஸ்தீன மக்களுக்கு மனிதாபிமான உதவிகளை செய்து வருவது குறிப்பிடத்தக்கது.

## ஆம்னி பேருந்துகள் கிளாம்பாக்கத்தில் மட்டுமே நின்று செல்லும்



சென்னை, 08 நவம்பர் 2023: சென்னையிலிருந்து இயக்கப்படும் ஆம்னி பேருந்துகள் கிளாம்பாக்கத்தில் மட்டுமே நின்று செல்லும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

தீபாவளி பண்டிகை வரும் 12-ந்தேதி கொண்டாடப்பட உள்ளதால், சென்னையில் தங்கி படிக்கும் மாணவர்கள் மற்றும் வேலை பார்க்கும் மக்கள் தங்களது சொந்த ஊர்களுக்கு செல்வார்கள். மக்களின் வசதிக்காக சிறப்பு பேருந்துகள், சிறப்பு ரெயில்கள் ஆகியவை அறிவிக்கப்பட்டு, சென்னையிலிருந்து மக்கள் பாதுகாப்பாக சொந்த ஊர்களாக பயணம் மேற்கொள்ள ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.


மேலும், சென்னை நகரப் பகுதிகளில் போக்குவரத்து நெரிசலைக் கட்டுப்படுத்த பல்வேறு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டு, தற்காலிக பேருந்து நிலையங்கள் அமைக்கப்பட்டு அங்கிருந்து பேருந்துகள் இயக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

இந்நிலையில் செங்கல்பட்டு மார்க்கமாக செல்லும் அனைத்து ஆம்னி பேருந்துகளும் கோயம்பேட்டில் இருந்து புறப்பட்டு, புறவழிச்சாலை வழியே கிளாம்பாக்கத்தில் மட்டுமே நின்று செல்லும் என்று ஆம்னி பேருந்து உரிமையாளர்கள் சங்கம் அறிவித்துள்ளது.

இது தொடர்பாக வெளியிட்டுள்ள அறிக்கையில், தீபாவளி பண்டிகையை முன்னிட்டு நவம்பர் 9, 10, 11ஶ்ரீந்தேதிகளில் தமிழகத்தின் பிற பகுதிகளுக்கு செங்கல்பட்டு மார்க்கமாக செல்லும் அனைத்து ஆம்னி பேருந்துகளும் கோயம்பேட்டிலிருந்து புறப்பட்டு நசரத்பேட்டை புறவழிச்சாலை வழியாக கிளாம்பாக்கம் தற்காலிக பேருந்து நிலையம் சென்று பயணிகளை ஏற்றிக்கொண்டு செல்லும். இந்த தேதிகளில் காவல்துறையின் உத்தரவுபடி நகரத்தின் உட்பகுதிகளான வடபழனி முதல் தாம்பரம் மற்றும் பெருங்களத்தூர் வரை ஆம்னி பேருந்துகள் இயக்கப்பட மாட்டாது. எனவே பயணிகள் கோயம்பேடு அல்லது கிளாம்பாக்கம் தற்காலிக பேருந்து நிலையம் ஆகிய 2 இடங்களில் ஆம்னி பேருந்துகளில் ஏறிச்செல்லலாம். கிழக்கு கடற்கரை சாலை மற்றும் பாண்டிச்சேரி வழியாக செல்லும் ஆம்னி பேருந்துகள் காவல்துறை அனுமதியுடன் வழக்கம்போல் இயக்கப்படும். மேலும் ஆம்னி பேருந்துகளில், சங்கம் நிர்ணயித்த கட்டணத்திற்கு மிகாமல் கட்டணம் வசூலிக்கும்படி உரிமையாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

ஆம்னி பேருந்துகள் கட்டண விவரம் இணையதளத்தில் பதிவேற்றப்பட்டுள்ளது. பயணிகள் ஆம்னி பேருந்து சம்பந்தமான புகார்களை 9043379664 என்ற சங்க தொலைபேசி எண்ணில் தெரிவிக்கலாம், என்று கூறப்பட்டுள்ளது.

## கால்வாய்க்குள் கார் பாய்ந்து ஒரே குடும்பத்தை சேர்ந்த 5 பேர் பலி



சென்னை, 08 நவம்பர் 2023: கால்வாய்க்குள் கார் பாய்ந்து ஒரே குடும்பத்தை சேர்ந்த 5 பேர் பலியானார்கள்.

கர்நாடக மாநிலம் தும்கூர் மாவட்டம் திப்ட்டூர் அருகே உள்ள நோன்வினகரே கிராமம் குங்கரள்ளி பகுதியை சேர்ந்தவர்கள் சந்திரப்பா (61), கிருஷ்ணப்பா (60), தனஞ்சயா (55), பாபு மற்றும் ஜெயண்ணா ஆகிய 5 பேரும் மைசூரில் உள்ள உறவினர் வீட்டில் நடந்த விருந்து நிகழ்ச்சிக்காக காரில் புறப்பட்டனர்.

விருந்து நிகழ்ச்சியை முடித்துக்கொண்டு 5 பேரும் மீண்டும் காரில் வீடு திரும்பிக் கொண்டிருந்தனர். நேற்றிரவு அவர்கள் மண்டியா மாவட்டம் பாண்டவபுரா தாலுகா பணக்கட்டா அருகே வந்து கொண்டிருந்தனர். அப்போது எதிரில் வந்த மோட்டார் சைக்கிள் மீது மோதாமல் இருக்க காரை திருப்பினர்.

அப்போது நிலை தடுமாறிய கார் சாலையோரம் இருந்த விஸ்வேஸ்வரய்யா கால்வாய்க்குள் பாய்ந்தது. கால்வாயில் தண்ணீர் அதிகளவில் ஓடியதால் கார் தண்ணீரில் மூழ்கி காரில் இருந்த 5 பேரும் சம்பவ இடத்திலேயே பலியானார்கள்.

இதுபற்றி தெரிய வந்ததும் பாண்டவபுரா போலீசார், மண்டியா மாவட்ட கலெக்டர் குமார், போலீஸ் சூப்பிரண்டு யத்தீஸ் மற்றும் தீயணைப்பு துறையினர் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று மீட்பு பணியில் ஈடுபட்டனர்.

கால்வாயில் அதிகளவில் தண்ணீர் சென்றதால் ராட்சத கிரேன்கள் வரவழைக்கப்பட்டு தண்ணீருக்குள் மூழ்கிய காரை கயிறு கட்டி மீட்டனர். பின்னர் தண்ணீரில் மூழ்கி பலியான 5 பேர் உடல்களையும் கடும் போராட்டத்துக்கு பின்பு மீட்டு பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தனர்.

இந்த விபத்து குறித்து பாண்டவபுரா போலீசார் வழக்குபதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி

# ஆஸ்கருக்கு இணையாக கருதப்படும் சர்வதேச எனர்கா கேமரிமேஜ் விழாவின் முதல் இந்திய ஜூரியாக நியமிக்கப்பட்டுள்ள முன்னணி ஒளிப்பதிவாளர் ரவி கே சந்திரன்

சென்னை, 08 நவம்பர் 2023: விருதுகள், பாராட்டுகள் மற்றும் அங்கீகாரங்கள் பிரபல ஒளிப்பதிவாளர் ரவி கே சந்திரனுக்கு புதிதல்ல. இவற்றுக்கு மகுடம் வைக்கும் அளவிலும் நமது நாட்டுக்கு பெருமை சேர்க்கும் வகையிலும் சர்வதேச புகழ் பெற்ற எனர்கா கேமரிமேஜ் விழாவின் முதல் இந்திய ஜூரியாக இவர் நியமிக்கப்பட்டுள்ளார். போலந்தில் நடைபெறும் இவ்விழாவின் 31வது பதிப்பில் ரவி கே சந்திரன் ஜூரியாக பங்காற்றுவார். நாற்பது வருடங்களாக ஒளிப்பதிவில் ஈடுபட்டுள்ள ரவி கே சந்திரன், 'கன்னத்தில் முத்தமிட்டால்', 'பிளாக்', 'மை நேம் இஸ் கான்' உள்ளிட்ட பல மாபெரும் வெற்றி பெற்ற மற்றும் விருதுகளை குவித்த பன்மொழி திரைப்படங்களின் ஒளிப்பதிவாளர் ஆவார். "கேமரிமேஜ்" என்பது சர்வதேச அளவில் புகழ்பெற்ற திரைப்பட விழாவாகும். ஒளிப்பதிவு கலையை இது கொண்டாடுகிறது. உலகெங்கிலும் உள்ள திரை கலைஞர்களால் ஆஸ்கருக்கு சமமாக கருதப்படும் இந்த விழா, விருது பெறும் திரைப்படங்களையும் கலைஞர்களையும் தேர்ந்தெடுப்பதில் மிகுந்த கவனம் செலுத்துவதற்காக புகழ் பெற்று விளங்குகிறது. மேலும், ஆஸ்கரை போல் இல்லாமல், குறிப்பிட்ட பிரிவுகளில் விருதுகளை வழங்கி திரைப்பட உருவாக்க கலை மீது தனக்குள்ள அர்ப்பணிப்பை இது பறைசாற்றுகிறது.



'மை நேம் இஸ் கான்' படத்தில் சிறப்பாக பணியாற்றியதற்காக 2010ம் ஆண்டில் எனர்கா கேமரிமேஜால் கோல்டன் ஃபிராக் விருதுக்கு பரிந்துரைக்கப்பட்ட முதல் இந்திய ஒளிப்பதிவாளர் ரவி கே சந்திரன் ஆவார். இந்த வருடத்தின் எனர்கா கேமரிமேஜ் விழா நவம்பர் 11 முதல் 18 வரை போலந்தில் உள்ள டோரன் நகரில் நடைபெறுகிறது. டேரன் அரோனோஃப்ஸ்கி, ரோஜர் டீக்கின்ஸ் மற்றும் ரால்ப் ஃபியன்னெஸ் உள்ளிட்ட சர்வதேச புகழ் பெற்ற பல கலைஞர்கள் இவ்விழாவுக்கு இதற்கு முன்னர் அழைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.


ஐ எஸ் சி என்று அழைக்கப்படும் இந்திய ஒளிப்பதிவாளர் சங்கத்தையும் எனர்கா கேமரிமேஜ் விழாவில் ரவி கே சந்திரன் பிரதிநிதித்துவப்படுத்துவார். கேமரிமேஜ் ஜூரியாக மூத்த கலைஞர் ரவி கே சந்திரன் நியமிக்கப்பட்டிருப்பது இந்திய ஒளிப்பதிவாளர் சங்கத்திற்கு பெருமை என்று கருதப்படுகிறது. மேலும், இந்தியத் திரைப்படத் துறை சர்வதேச அரங்கில் அதற்குரிய அங்கீகாரத்தை பெறுவதற்கான ஒரு படியாகவும் இந்த நியமனம் பார்க்கப்படுகிறது.

இதற்கிடையே, கமல்ஹாசன் நடிப்பில் மணிரத்னம் இயக்கத்தில் உருவாகும் 'தக் லைஃப்' திரைப்படத்தின் டீசர் சமீபத்தில் வெளியான நிலையில் அதில் இடம்பெற்றுள்ள ரவி கே சந்திரன் ஒளிப்பதிவு செய்த காட்சிகள் பெரும் கவனத்தை ஈர்த்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# டைட்டன் அறிமுகப்படுத்தும் புத்தம் புதிய ட்ராவெலர்: பயன்படுத்துவதற்கு தயாராகப் பொருத்தப்பட்ட ஜிபிஎஸ் மற்றும் ரன்னிங் கோர்சஸ் அம்சங்களுடன் கூடிய இந்தியாவின் முதல் பிட் வெர்ஸ் ஸ்மார்ட் வாட்ச்!

சென்னை, 08 நவம்பர் 2023: உடலைக் கட்டுக்கோப்பாக வைத்திருப்பதற்கும், புதுமைக்குமான ஒரு அட்டகாசமான பயணத்திற்காக, டைட்டன் புத்தம் புதிய டைட்டன் ட்ராவெலர் என்ற ஸ்மார்ட் வாட்ச்களை அறிமுகப்படுதியிருக்கிறது. இந்திய வாடிக்கையாளர்களின் காலை, மாலை என மேற்கொள்ளும் ஓடும் அனுபவம் மற்றும் உடலை கட்டுக்கோப்பாக வைத்திருப்பதை புரட்சிகரமாக்கும் வகையில் வடிமைக்கபட்டுள்ள இந்த ஸ்மார்ட் வாட்ச், ஓடுவதில் ஆர்வமுள்ள இன்றைய தலைமுறையினரிடையே மேம்பட்ட அனுபவத்தை அளிப்பதை உறுதி செய்கிறது. மேலும் அவர்களின் பயிற்சி மற்றும் செயல்திறனை மேம்படுத்த உதவுகிறது. உடற்தகுதி மற்றும் தொழில்நுட்பத்தை ஒன்றிணைத்து, நகர்ப்புறங்களில் வேலைப் பார்ப்பவர்கள், மராத்தான் ஆர்வலர்களுக்கென வடிவமைக்கப்பட்டுள்ளது, டைட்டன் ட்ராவெலர். மேலும், இக்காலத்தில் நமக்கு பெரும் சவாலாக இருக்கின்ற வேலை, குடும்பம், மற்றும் தனிப்பட்ட உடற்பயிற்சி இலக்குகளை சமநிலையில் வைத்துக்கொள்ள அவசியமான வாய்ப்புகளை வழங்குகிறது.

இயற்பியல் மற்றும் மெய்நிகர் டொமைன்களை தடையின்றி இணைக்கும் வகையில், இந்தியாவில் முதன்முறையாக அறிமுகப்படுத்திருக்கும், 'ரன் வித் டைட்டன் பிட்வர்ஸ்' என்ற இந்த அம்சமானது ஒரு இப்பிரிவில் இதுவரையில்லாத புரட்சியை உருவாக்கும் ஒரு கேம்-சேஞ்சர் ஆகும். இது உங்களுடைய இயங்கும் அனுபவத்தை மறுவரையறை செய்து, உங்களுடைய உடல் செயல்திறனின் உச்சத்திற்குச் செல்ல உங்களை தூண்டுகிறது. இதில் இடம்பெற்ற அம்சமானது உங்களுக்கு இலக்காக நீங்களே நிர்ணயித்து கொள்ளும் சுயவரம்புகளுடன் நீங்களே போட்டியிடவும், தொடர்ந்து உங்களை நீங்களே சவால் செய்யவும் உங்களை அனுமதிக்கிறது. இதன் விளைவாக உடற்பயிற்சி உலகில் ஒரு மாறுபட்ட அத்தியாயத்தை ரன்னிங் அனுபவத்தின் மூலம் கிடைக்கச்செய்கிறது. மேலும், டைட்டன் ஸ்மார்ட் வேர்ல்ட் செயலியில் ஒருவர் தங்களுக்கு விருப்பமான மெய்நிகர் அவதாரத்தையும் (ஸ்வீகூஷீ மீ ஷூ ணீநீ ணீஸ்ணீமீணீகூஷீ) தேர்வு செய்யலாம். இந்த டிஜிட்டல் அம்சத்துடன் சேர்ந்து இயங்கும் போது, ஒரு தனித்துவமான தொடர்பை மெய்நிகர் உலகத்துடன் அனுபவிக்கிறீர்கள். இது உங்களுக்கு ஒரு அற்புதமான உடற்பயிற்சி அனுபவத்தை உருவாக்குகிறது. இப்புதுமையான அம்சம் உண்மையான மற்றும் மெய்நிகர் உலகங்களுக்கு இடையே உள்ள வேறுபாட்டை உணர வைக்காமல் செய்வதன் மூலம், உடற்பயிற்சி உலகில் புதிய அத்தியாயத்தை உருவாக்குகிறது. இந்திய வாடிக்கையாளர்களின் உடற்பயிற்சி பயணத்தை மேம்படுத்தும் திறன்களுடன் கூடிய இந்த ஸ்மார்ட்வாட்ச் பொருத்தப்பட்ட ரன்னிங் கோர்சஸ் உடன் ஆறு நிமிட அறிமுக ஓட்டங்கள் முதல் இருபத்தி ஒன்பது நிமிடங்கள் வரையிலான மாற்று அனுபவம் வரை கொண்டு இயங்குகிறது. இவை எல்லா வயதுக்குட்பட்டவர்க்கும் ஏதாவது ஒரு வகையில் பயனளிப்பதை உறுதி செய்கிறது. இதில் நாம் தேர்ந்தெடுக்க ஓட்டம் மற்றும் நடைப்பயிற்சி ஆகிய இரு அம்சங்களுடன் கூடிய பல்வேறு பயிற்சி முறைகள் உட்பட, மாறுபட்ட வெவ்வேறு கால அளவுகளுடன் ஆறு இயங்கு பாடங்களைக் கொண்டுள்ளது. இந்த ஸ்மார்ட் வாட்ச் வழங்கும் முதன்மை, நடுத்தரம், மற்றும் அட்வான்ஸ் முறையிலான இலக்குகளை அடைய உங்கள் உடலைப் பயிற்றுவிக்கிறது.




டைட்டன் ட்ராவெலரானது, துல்லியம் மற்றும் வாடிக்கையாளர்கள் தங்களது விருப்பங்களுக்கேற்ப மாற்றியமைத்துகொள்ளும் தனிப்பயனாக்கம் ஆகிய டைட்டன் ஸ்மார்ட் வியரபில்ஸ்-ன் தத்துவத்திற்கேற்ப வரையறுக்கப்பட்டுள்ளது. ஒருவர் தனது உடற்பயிற்சி பயணத்தை தொடங்க விரும்பினாலும் அல்லது ஒரு உடற்பயிற்சி ஆர்வலர் தன்னைத்தானே சவால் செய்ய விரும்பினாலும் டைட்டன் ட்ராவெலர் அவர்களுக்கு பயனளிக்கிறது. அதிநவீன ஜிபிஎஸ் டிராக்கிங் ஒருங்கிணைப்பானது உங்கள் முன்னேற்றத்தை துல்லியமாக கண்காணிப்பதை உறுதி செய்கிறது, அதே நேரம் வாய்ஸ் பிராம்ப்ட் அம்சமானது ஒவ்வொரு முறையும் உங்களுக்கு வழிகாட்டும். அதுமட்டுமின்றி, இந்த சிஸ்டமானது அதன் செயல்பாடுகளில் மட்டும் கவனம்செலுத்தாமல், உங்களின் நல்வாழ்விற்கும் கவனம் செலுத்துகிறது. குறிப்பாக அதிகபட்ச வி ஓ2 மற்றும் தொடர்ச்சியாக இதயத்துடிப்பை கண்காணித்து, நீங்கள் பரிந்துரைக்கப்பட்ட வரம்புகளிலிருந்து விலகி, அனிமேஷன்கள் மூலம் ரன் நீடிப்புகளை செய்யதால் உங்களை எச்சரிக்கை செய்யும். உடற்பயிற்சிக்கு பிந்தைய நேரத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து, உங்கள் அடுத்த உடற்பயிற்சி அமர்வை திட்டமிட இந்த டைட்டன் ட்ராவெலர் முக்கியமான அறிவுரைகளை வழங்குகிறது. இப்படியான புதுமை மற்றும் டைனமிக் திறன்கள், ப்ரீமியம் வியரபில்ஸ் பிரிவில் டைட்டன் ட்ராவெலரை தனித்து நிற்கச் செய்கிறது. இந்த அமோலெட் ஸ்மார்ட்வாட்ச் முக்கியமான தகவல்களை உங்கள் விரல்நுனியில் வைக்கிறது. இலக்கை செட் செய்தல், பொருத்தப்பட்ட ஜிபிஎஸ், 24 ஙீ 7 உடல்நலக் கண்காணிப்பு, ஒரே முறை இணைத்தால் தொடர்ந்து இணைக்கும் வாய்ப்பை வழங்கும் சிங்கிள் சிங்க் பிடி அழைப்பு மற்றும் அலெக்சா போன்ற மேம்பட்ட அம்சங்களுடன் தினசரி தொடர்புகளுக்கு வசதி செய்கிறது. டைட்டன் ட்ராவெலர் உங்களின் உடற்பயிற்சி பயணத்தை புதிய உயரத்திற்கு கொண்டு செல்வது மட்டுமில்லாமல், எந்தவொரு சமரசங்களும் இல்லாமல் ஸ்னீக்கர்கள் இணைக்கப்பட்டிருப்பதை உறுதி செய்கிறது. இந்த ஸ்மார்ட் வாட்ச் அதிநவீன சுற்றுப்புற ஒலி கண்காணிப்பு, அழுத்த அளவீடு மற்றும் எஸ் பி ஓ 2 கண்காணிப்பு ஆகியவற்றை கொண்டுள்ளது. இந்த சாதனமானது துல்லியமான சுகாதார அறிவுரைகளை வழங்கி, நல்வாழ்வு மதிப்பீட்டின் மையத்தை வடிவமைக்கிறது.

ஸ்ட்ராவா கனெக்ட் என்னும் வசதி சோஷியல் நெட்வொர்க்கிங் அம்சங்களுடன் உடற்பயிற்சி கண்காணிப்பை ஒருங்கிணைக்கிறது, இது உங்கள் உடற்பயிற்சி புள்ளிவிவரங்களைக் கண்காணிக்கவும் தரவை விரிவாக ஆராயவும் உதவுகிறது. ஜிபிஎஸ் வாட்ச்கள், ஸ்மார்ட்வாட்ச்கள் மற்றும் சைக்ளிங் கம்ப்யூட்டர்கள் உட்பட, தொடர்ந்து வளர்ந்து வரும் பிரபலமான சாதனங்களுடன் எந்தவிதமான தடைகளும் இல்லாமல் இணைந்து செயல்படும் வகையில் இது வடிவமைக்கப்பட்டுள்ளது. இதனால் ஸ்ட்ராவாவின் வலுவான இயங்குதளத்தின் மூலம் உடற்பயிற்சிகளை ஒத்திசைக்கவும், சாதனைகளைப் பகிர்ந்து கொள்ளவும் மற்றும் சக உடற்பயிற்சி ஆர்வலர்களுடன் இணைந்திருக்கவும் இந்த அம்சம் அனுமதிக்கிறது.

நிபுணர்களின் அன்றாட வழக்கங்களின் பரபரப்பான அட்டவணைக்கு மத்தியில், நிகழ்வு நினைவூட்டல்கள், மல்டி-ஸ்போர்ட் மோட் மற்றும் 100 பாடல்களுக்கு மேல் இசை சேமிப்பக திறன் போன்ற பண்புக்கூறுகள், நீங்கள் சீராக இருக்க உதவுவதோடு மட்டுமில்லாமல் உங்கள் உடற்பயிற்சி பயணத்தை அடுத்தக்கட்டத்திற்கு அழைத்துச் செல்ல உதவுகிறது. மேலும், தொழில்துறையின் முதல் விரைவு பதில் அம்சமானது அதன் வரம்பை விரிவுபடுத்துவதன் மூலம், எஸ்எம்எஸ், இன்ஸ்டாக்கிராம், டிவிட்டர், வாட்ஸ்சப் மற்றும் எஃப் பி மெஸ்சேன்ஜர் போன்ற சமூக பயன்பாடுகளுக்கு உங்கள் தகவல்தொடர்பு அனுபவத்தை மாற்றியமைத்து ஒரு புதிய மாற்றத்தை வழங்குகிறது. மேலும் இது உங்கள் ஃபோனின் மெசேஜிங் செயலியுடன் இணைக்கப்பட்டு, தனிப்பயனாக்கப்பட்ட, ஸ்மார்ட் வாட்ச்சில் சேமிக்கப்பட்ட இன்-பில்ட் செய்திகளை நேரடியாக உங்கள் மணிக்கட்டில் இருந்து பகிர்ந்து கொள்ள அனுமதிக்கிறது. இது இணைந்திருக்கும் வசதிக்காக ஒரு புதிய அளவுகோலை அமைக்கிறது.

டைட்டன் கம்பெனி லிமிடெட்டின் வியரபில்ஸ் பிரிவின் சீஃப் ஆபரேட்டிங் ஆபிஸர் ரவி குப்புராஜ் கூறுகையில், "டைட்டனில், தொடர்ச்சியான ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அம்சங்கள் என இடைவிடாத கண்டுபிடிப்புகள் மூலம் நாங்கள் வாடிக்கையாளர்களுக்கு ஆரோக்கியமான வாழ்வை மேற்கொள்ள தொடர்ந்து உதவி வருகிறோம். டைட்டன் ட்ராவெலர் உடன், பிரீமியம் வியரபில்ஸ் தொழில்நுட்பத்தின் வாயிலாக எங்களது நுகர்வோர் ஆரோக்கியம் மற்றும் உடற்தகுதியை மேம்படுத்தும் வகையில், சிறந்த கண்டுபிடிப்புகளை அறிமுகப்படுத்துவதற்கான முதல் படியை நாங்கள் எடுத்து வருகிறோம். பிட்வெர்ஸ் மற்றும் ரன்னிங் கோர்சஸ் போன்ற அம்சங்கள் எங்களிடம் இருப்பவற்றின் ஒரு தொடக்கமே. எங்கள் மதிப்புமிக்க நுகர்வோரின் வாழ்க்கையை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு, தொழில்துறையில் எல்லைகளைத் தாண்டி, புதிய தரங்களை அமைக்க நாங்கள் உறுதியாக இருக்கிறோம்."

நேரம் விலைமதிப்பற்றதாகவும், உடற்பயிற்சி அவசியமாகவும் கருதும் உலகில், தடகள காலணிகள், உடைகள் மற்றும் பயன்பாட்டு உபகரணங்கள் ஆகியவற்றில் உலகளாவிய முன்னணி நிறுவனமான எ எஸ் ஐ சி எஸ் உடனான டைட்டன் டிராவெலரின் கூட்டு செயல்பாடு ஒரு கேம்-சேஞ்சராக மாறுகிறது. ஒவ்வொரு டைட்டன் ட்ராவெலர் வாங்கும் போதும், வாடிக்கையாளர்கள் எ எஸ் ஐ சி எஸ் தயாரிப்புகளில் பிரத்தியேக 10% தள்ளுபடியைப் பெறுகிறார்கள். இந்தச் சலுகை நவீன உடற்பயிற்சி ஆர்வலர்களின் பயணத்தில் கூடுதல் முனைப்பை ஏற்படுத்தும். எ எஸ் ஐ சி எஸ் இந்தியா மற்றும் தெற்காசியாவின் நிர்வாக இயக்குநர் ராஜத் குரானா, இந்த கூட்டு செயல்பாடு குறித்து பேசுகையில்,"புதுமையான தொழில்நுட்பத்தின் இன்றைய மேம்பட்ட யுகத்தில், வேகமான சூழலில் வாழ்ந்து வரும் மக்கள் ஆரோக்கியம் மற்றும் உடற்பயிற்சிக்கு முன்னுரிமை அளிப்பது இன்றியமையாத ஒன்றாகிறது. எ எஸ் ஐ சி எஸ் கொண்டிருக்கும் தத்துவமான 'சவுண்ட் மைண்ட், சவுண்ட் பாடி' மற்றும் டைட்டனின் வடிவமைப்பு சித்தாந்தமும் இணைந்து டைட்டன் ட்ராவெலரை உருவாக்குவது என்பது மனிதர்களின் உடற்தகுதி இலக்குகளை மேம்படுத்தும் எங்களது ஒருமித்த இலக்காகும். மன மற்றும் உடல் நலனை சமநிலையில் பராமரித்துக்கொள்ள, நவீன வாழ்க்கையின் தேவைகளைச் சமாளிக்க இவை இன்றியமையாத துணையாக செய்லபடுகிறது.

டைட்டன் ட்ராவெலர்', நவம்பர் 9-ம் தேதி 2023 முதல் 12,995 ரூபாய் விலையில் உலக முழுவதிலும் உள்ள டைட்டன் விற்பனை நிலையங்களிலும், <https://www.titan.co.in/> என்ற டைட்டனின் வர்த்தக இணையதளத்திலும் கிடைக்கும்.

## லெஜண்ட்ஸ் லீக் கிரிக்கெட், இந்தியாவில் விளையாட்டுகளை மேம்படுத்துவதற்காக வந்தே பாரத் எக்ஸ்பிரஸ் மூலம் ஒரு தேசிய பிரச்சாரத்தை அறிவிக்கிறது




சென்னை, 08 நவம்பர் 2023: இந்திய ரயில்வேயுடன் இணைந்து லெஜண்ட்ஸ் லீக் கிரிக்கெட் ஒரு தேசிய பிரச்சாரத்தை அறிவித்துள்ளது, ஏனெனில் லீக்கின் விரும்பத்தக்க கோப்பை 2023 நவம்பர் 8 முதல் வந்தே பாரத் எக்ஸ்பிரஸில் பயணிக்கும். கோப்பை 17 வெவ்வேறு மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் நாடு முழுவதும் பயணிக்கும். இந்த தனித்துவமான முதல் அனுபவம் நாட்டின் ஒவ்வொரு பகுதியிலிருந்தும் கிரிக்கெட் பிரியர்களின் கற்பனையைப் பிடிக்க 15 நாள் களியாட்டமாகும். நாட்டின் அதிவேக ரயில் நெட்வொர்க்கான வந்தே பாரத் எக்ஸ்பிரஸ் வழியாக லெஜண்ட்ஸ் லீக் கிரிக்கெட்டின் ஒரு பகுதியாக, விளையாட்டின் ஜாம்பவான்களுடன் கிரிக்கெட் பிரியர்களும் இருப்பார்கள்.

ரயில்வே அமைச்சர் ஸ்ரீ அஷ்வினி வைஷ்ணவ், "லெஜெண்ட்ஸ் லீக் கிரிக்கெட் மற்றும் புகழ்பெற்ற வீரர்களை வந்தே பாரத் நிகழ்ச்சியில் வரவேற்கிறோம், மேலும் நாடு முழுவதும் விளையாட்டுகளை ஊக்குவிக்கும் இந்த நம்பமுடியாத பயணத்தை எதிர்நோக்குகிறோம்" என்று கூறினார்.

அனுபவத்தை வழங்க உறுதிபூண்டுள்ளது. இது நாட்டின் ஒவ்வொரு மூலையிலும் விளையாட்டு கலாச்சாரத்தை மேம்படுத்துவதற்கான ஒரு வகையான முயற்சியாகும். கெய்ல், ஸ்ரீசாந்த் மற்றும் வாட்சன் போன்ற சிறந்த ஜாம்பவான்கள் எல் எல் சி கோப்பையுடன் வந்தே பாரத் எக்ஸ்பிரஸில் நாடு தழுவிய சுற்றுப்பயணத்தை மேற்கொள்வார்கள். லெஜண்ட்ஸ் லீக் கிரிக்கெட்டின் சி ஈ ஓ ராமன் ரஹேஜா கூறினார்.

## புவியியல் ரீதியாக உள்ளடக்கிய தன்னார்வ நிகழ்வின் (ஜி.ஐ.வி.ஈ.) ஒரு பகுதியாக, ஒப்டம் தன்னார்வத் தொண்டர்கள் சென்னையில் உள்ள ஹோப் ஃபவுண்டேஷனைப் பார்வையிடுகின்றனர்



சென்னை, 08 நவம்பர் 2023: ஒப்டம் குழு உறுப்பினர்கள், 2023 அக்டோபர், 3 மற்றும் 15 க்கு இடையில் ஒப்டமில் நடைபெறும் வருடாந்திர புவியியல் ரீதியாக உள்ளடக்கிய தன்னார்வ நிகழ்வின் (ஜி.ஐ.வி.ஈ.) ஒரு பகுதியாக, சென்னையில் உள்ள ஹோப் பவுண்டேஷனில் உள்ள குழந்தைகளுடன் ஒரு நாளைக் கழித்தனர். ஒப்டம் என்பது ஃபார்ச்சூன் 5 நிறுவனமான யுனைடெட் ஹெல்த் குரூப்பின் (யூ எச் ஜி) ஒரு முன்னணி சுகாதார தீர்வு மற்றும் பராமரிப்பு விநியோக அமைப்பாகும்.

ஒப்டம் தன்னார்வலர்கள், விளையாட்டுகள், ஓவியம் மற்றும் கதைசொல்லல் உள்ளிட்ட ஊடாடும் செயல்பாடுகளுடன் குழந்தைகளுடன் ஈடுபாடு கொண்டனர். ஜி.ஐ.வி.ஈ. மூலம், உணர்திறன், ஒத்துணர்வு மற்றும் நம்பிக்கை சூழலை வளர்க்கும் அதே வேளையில் குழு உறுப்பினர்களுக்கு அக்கறை செலுத்த, இணைக்க, மற்றும் ஒன்றாக வளர ஒரு தளத்தை வழங்குவது இதன் நோக்கமாகும்.

## அகர்சந்த் மான்மல் ஜெயின் கல்லூரியில் தேசியப் புற்றுநோய் விழிப்புணர்வு தின




**அகர்சந்த் மான்மல் ஜெயின் கல்லூரியில் தேசியப் புற்றுநோய் விழிப்புணர்வு தினத்தை மையமாகக் கொண்டு, விழிப்புணர்வை ஏற்படுத்துவதில் ஒற்றுமையுடன் செயல்புரிய வேண்டும் என்பதை வலியுறுத்தக் கூடிய நிகழ்வு நடந்தேறியது. புற்றுநோய்க்கு எதிரான போரில் நம்பிக்கையுடனும் ஒற்றுமையுடனும் செயல்பட வேண்டும் என்ற சிந்தனையைத் தூண்டும் வகையில் 300க்கும் மேற்பட்ட இளஞ்சிவப்பு உடையணிந்த கல்லூரி மாணவர்களும் ஆசிரியர்களும் ஒன்றிணைந்து கலையம்சம் கூடிய இளஞ்சிவப்பு நாடா போன்ற வடிவத்தில் ஒருங்கிணைந்தனர்.**

**புற்றுநோய்க்கு எதிரான மாணவர்களின் ஒருங்கிணைந்த இந்த முயற்சி, குறிப்பிடத்தக்க அளவில் அவர்களிடையே ஏற்பட்டுள்ள ஒற்றுமையின் வலிமையை அடையாளப்படுத்தியது. புற்றுநோய்க்கு எதிரான கண்கவர் இளஞ்சிவப்பு மனித நாடா எல்லோரிடமும் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியது. புற்றுநோயிலிருந்து கடந்து வந்தவரும் உத்வேகப் பேச்சாளருமான திருமதி நீரஜா மாலிக் நிகழ்வில் கலந்து கொண்டார். திருமதி மாலிக் தனது எழுச்சி மிக்க பயணத்தைக் கூடியிருந்தோரிடம் பகிர்ந்து கொண்டார். ஆரம்பகாலத்திலேயே புற்று நோயைக் கண்டறிதலின் முக்கியத்துவத்தை அடிக்கோடிட்டுக் காட்டினார். மேலும் அவரது வார்த்தைகள் உற்சாக ஒளியை ஏற்படுத்தின.**

**இந்த அமர்வைத் தொடர்ந்து, சிறப்பு விருந்தினர் அவர்கள் புற்றுநோய் விழிப்புணர்வில் பயனுள்ள தன் பங்களிப்பைச் செலுத்தியமைக்காக அகர்சந்த் மான்மல் ஜெயின் கல்லூரிக்குத் தனது நன்றியைப் பதிவு செய்தார்.**

## அமேசான், விற்பனையாளர்களுக்கு சாதனை உயர் வெகுமதியை வெல்லும் வாய்ப்பை அறிமுகப்படுத்துகிறது

சென்னை, 08 நவம்பர் 2023: நாடு முழுவதும் உள்ள விற்பனையாளர்களுக்கு இந்த பண்டிகைக் காலத்தை வெற்றிகரமாக மாற்றுவதற்கான தனது உறுதிப்பாட்டின் ஒரு பகுதியாக, அமேசான் 'அமேசான் விற்பனையாளர் வெகுமதிகள் 2023' திட்டத்தின் கீழ், ஒரு சாதனை உயர் வெகுமதிகளை வெல்லும் வாய்ப்பை அறிமுகப்படுத்தியது. விற்பனையாளர்கள் இப்போது 10 லட்சம் ரூபாய் மதிப்புள்ள வெகுமதிகளுடன் ஒரு சொகுசு காரை [மெர்சிடிஸ் பென்ஸ்] வெல்லும் வாய்ப்பைப் பெற்றுள்ளனர். இதற்கு, விற்பனையாளர்கள் நவம்பர் 10, 2023 வரை செல்லுபடியாகும் 'அமேசான் விற்பனையாளர் வெகுமதிகள் 2023' திட்டத்தில் பங்கேற்க வேண்டும், மேலும், 20 விற்பனையாளர்கள் ஐரோப்பா/தாய்லாந்துக்கான சர்வதேச விடுமுறைகளை வெல்லும் ஒரு வாய்ப்பைக் கொண்டுள்ளனர். விற்பனையாளர்கள், இந்த திட்டத்தில் பங்கேற்பதன் மூலமும், திட்டத்தின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளைப் பூர்த்தி செய்வதன் மூலமும், இந்தப் வெகுமதிகளை வெல்ல முடியும்.

கூடுதலாக அமேசான் தனது அனைத்து விற்பனையாளர்களுக்கும், செப்டம்பர் 28 முதல் அக்டோபர் 27, 2023 வரை 'தி கிரேட் இந்தியன் ரெஃபரல் ஆஃபரை' அறிமுகப்படுத்தியுள்ளது. இந்தத் திட்டத்தின் மூலம் Amazon.in இல் பதிவுசெய்து விற்க நண்பர்களைப் பரிந்துரைப்பதன் மூலம், விற்பனையாளர்கள் இப்போது ரூ.11500 வரை வெகுமதிகளைப் பெறலாம்.* இதில் பங்கேற்க, விற்பனையாளர்கள், அமேசான் செல்லர் செண்ட்ரல் இணையதளத்தில் உள்ள 'பார்ட்டிசிபேட் நவ்' என்ற பொத்தானைக் கிளிக் செய்து பதிவு செய்ய வேண்டும். பதிவுசெய்தவுடன், விற்பனையாளர்கள் தங்கள் அழைப்பு இணைப்பை தங்கள் நண்பர்கள், சக பணியாளர்கள் அல்லது கினீணீக்ஷஷீஸீ.வீஸீ இல் விற்பனையாளராக சேர ஆர்வமுள்ள வணிக அறிமுகமானவர்களுடன் பகிர்ந்து கொள்ளலாம்.

அமேசான் இந்தியா நிறுவனத்தின் செல்லிங் பார்ட்னர் செர்வீசஸ் இயக்குனர் அமித் நந்தா, "எங்கள் விற்பனையாளர்களுக்கு ஒரு சாதனை உயர் வெகுமதிகளை வெல்லும் வாய்ப்பை அறிமுகப்படுத்துவதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். விற்பனையாளர்கள் எங்கள் வணிகத்தின் தூண்கள் என்று நாங்கள் நம்புகிறோம், மேலும் அவர்கள் வெற்றிபெறத் தேவையான கருவிகள் மற்றும் வளங்களை அவர்களுக்கு வழங்க நாங்கள் கடமைப்பட்டுள்ளோம். இந்த முன்முயற்சிகள், எங்கள் விற்பனையாளர்களுக்குத் திரும்பக் கொடுப்பதற்கும், இந்த ஆண்டின் பரபரப்பான சீசனுக்கு அவர்கள் தயாராகும் போது அவர்களுக்கு ஆதரவளிப்பதற்கும் எங்களின் வழியாக இருக்கின்றன. அனைத்து விற்பனையாளர்களையும் இந்த திட்டத்தில் பங்கேற்கவும், கிடைக்கும் பல வெகுமதிகளைப் பயன்படுத்திக் கொள்ளவும் நாங்கள் ஊக்குவிக்கிறோம்." என்று கூறினார்.

2023 ஆகஸ்ட் 27 மற்றும் நவம்பர் 4 தேதிக்கு இடையில் சேரும் அனைத்து புதிய விற்பனையாளர்களுக்கும் ஒரு 50% பரிந்துரை கட்டண தள்ளுபடியை அமேசான் அறிவித்துள்ளது. 60 நாட்களுக்கு செல்லுபடியாகும் இந்த தள்ளுபடியானது, முன்கூட்டிய செலவுகளைக் குறைக்கவும் மற்றும் புதிய விற்பனையாளர்களை ஆதரிக்கவும் வடிவமைக்கப்பட்டுள்ளது. உள்ளூர் வணிகங்கள் மற்றும் குறு சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் ஆன்லைனில் தங்கள் வணிகங்களைத் தொடங்க அல்லது விரிவாக்க இந்த வரவிருக்கும் பண்டிகைக் காலம் ஒரு சிறந்த வாய்ப்பாகும். நீல்சன் மீடியாவுடன் இணைந்து நடத்தப்பட்ட சமீபத்திய ஆய்வு, இந்தியாவில் 81% நுகர்வோர், பண்டிகைக் காலத்தில் ஷாப்பிங்கை எதிர்பார்க்கிறார்கள் என்று எடுத்துக்காட்டுகிறது. இது வணிகங்கள் மற்றும் குறு சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கான ஒரு குறிப்பிடத்தக்க வாய்ப்பைக் குறிக்கிறது. Amazon.in பண்டிகை ஷாப்பிங்கிற்கான மிகவும் நம்பகமான பிராண்டாக அதன் நிலையை உறுதிப்படுத்துகிற 68% நுகர்வோரால் விருப்பமான ஆன்லைன் ஷாப்பிங் இடமாக அடையாளம் காணப்பட்டது.

அமேசான், வரவிருக்கும் பண்டிகைக் காலத்திற்கான தயாரிப்பில் ஆன்லைன் விற்பனையை ஒழுங்குபடுத்த விற்பனையாளர்களுக்கு உதவும் வகையில் பல புதுமைகளையும் அறிமுகப்படுத்தியுள்ளது. இந்திய விற்பனையாளர்களுக்கான இந்த எளிமைப்படுத்தப்பட்ட பதிவு செயல்முறை, ஆன்லைன் விற்பனையைத் தொடங்குவதை எளிதாக்குகிறது, மேலும் சேல் ஈவென்ட் பிளானர் ஆனது, விற்பனையாளர்களுக்கு கவர்ச்சிகரமான பரிவர்த்தனைகளை வழங்கவும், சரக்குகளை நிர்வகிக்கவும், சாத்தியமான விற்பனையை அதிகரிக்கவும் உதவுகிறது. கூடுதலாக, புதிய விற்பனையாளர் வெற்றி மையம், புதிய விற்பனையாளர்களுக்கு நேரடி பயிற்சியை நடத்துவதன் மூலம் முதல் முறை விற்பனையாளர்களை ஆதரிக்கிறது; இந்த இலவச இணையவழி கருத்தரங்குகள் புதிய விற்பனையாளர்கள் தங்கள் சந்தேகங்களைத் தீர்த்துக்கொள்ளவும், சந்தையில் விற்பனையைப் பற்றி அறிந்து கொள்ளவும், பட்டியல்கள், ஷிப்பிங், பிரைம், பரிவர்த்தனைகள் கூப்பன்கள் மற்றும் பலவற்றைப் புரிந்து கொள்ளவும் அனுமதிக்கின்றன.

## ஓரியண்ட் எலக்ட்ரிக் தீபாவளியை முன்னிட்டு ஜாய்லைட் பண்டிகை விளக்குகளை அறிமுகப்படுத்துகிறது

சென்னை, 08 நவம்பர் 2023: பன்முகப்படுத்தப்பட்ட யு எஸ் டி 2.8 பில்லியன் கொண்ட சி கே பிர்லா குழுமத்தின் ஒரு பகுதியான ஓரியண்ட் எலக்ட்ரிக் நிறுவனம், பிரகாசமான விளக்குகள் மற்றும் பண்டைய மரபுகளைக் கொண்டாடும் தீபாவளிக்கு ஜாய்லைட்ஸ் எனும் புதிய விளக்கு வரம்புகளை அறிமுகப்படுத்துகிறது. ஓரியண்ட் ஜாய்லைட் பண்டிகை விளக்குகள் அனைத்து இடத்திலும் பிரகாசத்தையும், கொண்டாட்ட உணர்வையும் சேர்க்க வடிவமைக்கப்பட்ட அலங்கார விளக்குகளின் தொகுப்பாக இருக்கிறது. இந்த வரிசையில் தியா விளக்கு, நட்சத்திர விளக்கு, பந்து விளக்கு, கிரிஸ்டல் எல்இடி தோரன் விளக்கு, கணேஷ் ஜி மற்றும் ஸ்வஸ்திக், ரோசரி மற்றும் பிக்சல் சர விளக்குகள் மற்றும் ரோப் லைட் ஆகியவை அடங்கும். ஓரியண்ட் ஜாய்லைட் வரம்பு பாரம்பரிய விழாக்களின் சாரத்தை நவீன தொடுதலுடன் உள்ளடக்கி, பண்டிகை மற்றும் பிற சிறப்பு நிகழ்வுகளுக்கு சரியான பிரகாசத்தைச் சேர்க்கிறது.

ஓரியண்ட் எலக்ட்ரிக் லிமிடெட் நிர்வாக துணைத் தலைவர் புனீத் தவான் கூறுகையில், "நம் நாட்டில் 'விளக்குகளின் பண்டிகை' கலாச்சார முக்கியத்துவத்தை நாங்கள் புரிந்துகொள்கிறோம். மேலும் மகிழ்ச்சியான தீபாவளி கொண்டாட்டத்தின் போது ஜாய்லைட் பண்டிகை விளக்குகளை அறிமுகப்படுத்துவதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். இந்த மேட்-இன்-இந்திய விளக்குகள் நுகர்வோர்களுக்கு உயர்தர பிராண்டட் பண்டிகை விளக்குகளைப் பெறுவதற்கான வாய்ப்பை அளிக்கும் அதே வேளையில், எந்தவொரு அமைப்பிலும் பண்டிகைக் கால சூழலை மேம்படுத்துவது உறுதியாகும். திருமணங்கள், விருந்துகள் மற்றும் பிற சிறப்பு சந்தர்ப்பங்கள் போன்ற பல்வேறு கொண்டாட்டங்களுக்கு ஏற்ற வகையில் எங்களின் புதிய பல்துறை வரம்பு தீபாவளி பண்டிகையத் தாண்டி அதன் புத்திசாலித்தனத்தை விரிவுபடுத்துகிறது. இந்திய லைட்டிங் துறையில் முன்னணி பிராண்டுகளில் ஒன்றாக, இந்திய நுகர்வோரின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் புதுமையான மற்றும் உயர்தர லைட்டிங் தீர்வுகளை வழங்க நாங்கள் கடமைப்பட்டுள்ளோம்" என்றார்.

வெவ்வேறு வடிவங்கள், அளவுகள், வண்ணங்கள் மற்றும் நீளங்களில் கிடைக்கும் இந்தியாவில் தயாரிக்கப்பட்ட ஓரியண்ட் ஜாய்லைட் பண்டிகை விளக்குகள் மக்கள் தங்கள் இடத்தை விரைவாகவும், கொண்டாட்டத்திற்கு உரியதாக மாற்றவும், உங்கள் விழாக்களுக்கு நேர்த்தியை சேர்க்க உதவும். நட்சத்திரங்களைப் போல மின்னும் திகைப்பூட்டும் சர விளக்குகள் முதல், காலத்தால் அழியாத அழகை வெளிப்படுத்தும் அலங்கரிக்கப்பட்ட தியா விளக்குகள் வரை, ஜாய்லைட் வரம்பில் தேர்வு செய்ய ஏராளமான விருப்பங்களை வழங்குகிறது. சாதாரண விளக்குகளைப் போலல்லாமல், ஓரியண்ட் ஜாய்லைட் பண்டிகை விளக்குகள் அதிக லுமன் வெளியீடு, அசல் பிரகாசத்தை நீண்ட காலத்திற்கு தக்கவைத்தல், தடிமனான செப்பு கம்பி மற்றும் இந்தியாவிற்கான தனிப்பயன் பிளக் போன்ற பல அம்சங்கள் மற்றும் பலன்களுடன் வருகின்றன. நிறுவனம் தனது பிராண்ட் ஸ்டோர் மூலம் ஜாய்லைட் பண்டிகை விளக்குகளின் வெவ்வேறு கலவைகளைக் கொண்ட தொகுக்கப்பட்ட தீபாவளி பரிசுப் பெட்டிகளையும் வழங்குகிறது.

ஜாய்லைட் பண்டிகை விளக்குகளை காட்சிப்படுத்தவும் விளம்பரப்படுத்தவும் டிவி, பிரிண்ட் மற்றும் டிஜிட்டல் ஆகியவற்றை உள்ளடக்கிய விளம்பரப் பிரச்சாரத்தையும் ஓரியண்ட் எலக்ட்ரிக் தொடங்கியுள்ளது.